உ

சிவமயம்



புட்டா வாஸ்து

(வாஸ்து – ஜோதிடம்)



சிவசிவ **சரவணன்**

குரு வணக்கம்

குரு ப்ரம்மா குரு விஷ்ணு
குருதேவோ மஹேஸ்வர:
குரு சாக்ஷாத் பரப்ரம்மா
தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

ஸ்ரீ விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக்கொழுந்தனை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே...!

ஸ்ரீ அபிராமி அந்தாதி

வையம், துரகம், மதகிரி, மாமகுடம், சிவிகை
பெய்யும், கனகம், பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க் குளவாகிய சின்னங்களே...!

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனஎல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே...!



ஸ்ரீ வாஸ்து காயத்ரி

ஓம் அநுக்ரஹரூபாய வித்மஹே
பூமிபுத்ராய தீமஹி
தந்நோ வாஸ்துபுருஷ : ப்ரசோதயாத்

கிரகப் பிரவேசப் பத்திரிகையில் இப்பாடலை சேர்ப்பது சிறப்பு

இல்லத்திற் சென்று புக்கார் இருநிதிக் குவைகள் ஆர்ந்த
செல்வத்தைக் கண்டு நின்று திருமனை யாரை நோக்கி
வில்லொத்த நுதலாய்! இந்த விளைவெலாம் என்கொல் என்ன
அல்லொத்த கண்டன் எம்மான் அருள்தர வந்த தென்றார்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்டினல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

சமர்ப்பணம்

நீண்ட நாட்களாக என்னுள் தேங்கிக்கிடந்த வாஸ்து சாஸ்திரம் பற்றிய விளக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் முயற்சியே இந்நூல். அடிப்படையில் நான் ஒரு கட்டட இன்ஜினியர். எனக்குள் ஒரு தேடல், ஒரு கவியார்வம் மிகுந்த சிந்தனை உண்டு. இவை எல்லாவற்றிலும் நான் ஒரு கலவையாக இருக்கின்றேன்.

ஒரு குழந்தை சிலேட்டில் வரையும் ஓவியத்தைப்போல நான் அறிந்தவற்றை உங்களுக்குச் சொல்லும் ஓர் ஆர்வம்தான் இது. இந்தக் குழந்தையின் கிறுக்கல்களை புரிந்து கொள்ள வேண்டுகிறேன். குழந்தையின் கிறுக்கல் ஓவியமாகலாம். அத்தகைய எதிர்பார்ப்பு எனக்குள் உண்டு. இந்நூலில் அடியேன் ஏதேனும் தவறுகள் செய்திருப்பின், அத்தவறுகளை சுட்டிக்காட்டி மேலும் பக்குவப்படுத்தவேண்டி மனம், வாக்கு, காயத்தால் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன். இனிவரும் நூல்களில் இக்குழந்தையின் வளர்ச்சியை நிச்சயமாக தாங்கள் எதிர்பார்க்கலாம்.

அடியேனின் பெற்றோர் *ஸ்ரீமதி ஜோதி - ஸ்ரீமான் ராஜாராமய்யர்* அவர்கள், அடியேனுக்கு சிவதீட்சை அருளிய குரு இறையருட்செம்மல் ***சிவஸ்ரீ பாலசுப்பிரமணியம் சிவாச்சாரியார்*** அவர்கள், வாஸ்து ஆலோசகர் சிவதீட்சகர் ***வாமதேவசிவம் ஹரிவாசுதேவ் அய்யா*** அவர்கள், அடியேனின் ஜோதிடகுரு ***M.V. சுப்புராமன்*** அவர்கள், இந்நூல் உருவாகக் காரணமாக இருந்த திரு. ***V.V. ரெங்காச்சாரி (SE /EB)*** அவர்கள்,, புலவர் ***கணேசன் அய்யா*** அவர்கள் ஆசீர்வாதங்களுடன் இந்நூலை மேற்கூறிய பெரியோர்களின் பாதகமலங்களில் புஷ்பாஞ்சலியாக சமர்ப்பிக்கின்றேன்.

வாஸ்து சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பரிந்துரைகள் செய்து இந்நூல் வெளிவர உதவிய நண்பர் திரு. ***C.S. சரவணன்*** அவர்களுக்கும், வார்த்தைக் கோர்வைகளைத் தொடுத்து ஆன்மீக சம்பந்தமான உதவிகள் செய்த நண்பர் திரு. ***R.V.J. ராகவ அய்யங்கார்*** அவர்களுக்கும் என் நேசம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜோதியில்லாமல் சுடரில்லை. அதேபோல் இந்நூல் வெளி வர பேராதரவு அளித்த ***விளம்பரதார அன்பர்களுக்கு இதயங்கனிந்த நன்றிகளைக் கூற கடமைப்பட்டுள்ளேன். வாழ்க வளமுடன்.***

- *சிவசிவ P.R. சரவணன்*

(கட்டட பொறியாளர், வாஸ்து ஆலோசகர்)

உ
சிவமயம்

வாஸ்து சாஸ்திரப்படி வரைபடம் அமைத்து, வாஸ்து பூஜையை வாஸ்து நாளன்று ஆரம்பிக்கின்றனர். வாஸ்து என்பதற்கு நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களைக் குறிக்கிறது. இவற்றில் ஏதேனும் ஒன்று கூடினாலும், குறைந்தாலும் நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. பஞ்ச பூதங்கள் உறையும் ஜடப்பொருட்களான வஸ்துக்களை வாஸ்துவாக மாற்றிக் கொள்கிறோம்.

புகைவண்டி செல்வதற்கு இரண்டு தண்டவாளங்கள் எவ்வளவு முக்கியமோ அதேபோல் ஒருவர் வீடு கட்டுவதற்கு வாஸ்துவும், ஜாதகமும் முக்கியமானது. அவை இரண்டும் நன்றாக இருந்தால் வாழ்க்கையென்னும் தண்டவாளங்களில் புகைவண்டி நன்றாக ஓடும்.

ஒருவருக்குத் திருமணம் செய்யவேண்டுமானால் அவரின் ஜாதகப்படி அவருக்கு வியாழ நோக்கம் வந்து விட்டதா? என்றும், களத்திர ஸ்தானாதிபதி மற்றும் களத்திரகாரகன் எப்படி, எந்த வீட்டில் யாருடன் சேர்ந்து இருக்கிறார்? போன்ற கேள்விகளைக் கேட்கின்றனர். ஜோதிடரிடம் அதைப்பற்றி ஆலோசிக்கின்றனர். ஆனால் வீடு கட்டுவதற்கு வாஸ்துவைப் பற்றி வாஸ்து நிபுணர்களிடம் ஆலோசிப்பது இல்லை.

ஜோதிடம் என்பது வேதத்தின் ஒரு அங்கமாகும். நமது ஊழ்வினையின் பிரதிபிம்பமே ஜாதகமாகும். ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பைப் பொறுத்து ஜாதகரின் வாழ்க்கை அமைகிறது. சுப ஆதிக்கம் இருந்தால் ஜாதகர் நன்றாக இருப்பார். அசுப ஆதிக்கம் நிறைந்திருந்தால் ஜாதகர் வாழ்க்கையில் மிகவும் துன்பப்படுவார்.

அதேபோல் வீட்டில் உள்ள எட்டுத்திசைகளில் உள்ள கிரகங்களின் ஆதிக்கத்தைப் பொறுத்து வீட்டின் அமைப்பு இருந்தால் சுப பலன்களே கிட்டும்.

நமது ஜென்ம ஜாதகத்தில் உள்ள கிரகங்களை மாற்றியமைக்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. அதில் கையை வைக்க முடியாது. ஆனால் வாஸ்து சாஸ்திரம் அப்படியல்ல.

வாஸ்து தோஷத்தினால் நமக்கு ஏற்படும் பெரிய சிரமங்களைக்கூட சாஸ்திரத்தின் அடிப்படையில் சிறுசிறு மாற்றங்கள் செய்தால் ஜாதக ரீதியாகவும் நமக்கு ஏற்படும் துர்பலன்கள்கூட குறைந்து பரிகாரம் ஆகி விடும்.

புதியதாக வீடு கட்டுபவர்கள் சரியான வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில் வீட்டை அமைத்துக்கொண்டால் அவர்கள் மட்டுமல்ல... அவர்களின் சந்ததியினரும் ஒற்றுமையுடனும், பதினாறு செல்வங்களுடனும் வாழ்வாங்கு வாழ்வார்கள் என்பது நிச்சயம்...! நிச்சயம்...!! நிச்சயம்...!!!

அன்புடன் ***சிவசிவ P.R. சரவணன்***

வாஸ்து சாஸ்த்திரத்தின் பலன்கள்

★ ஈசான மூலையில் அதாவது வடகிழக்கு பக்கம் சாலை உள்ள கட்டிடங்கள் பெண் சொத்தாக இருந்தால் மென்மேலும் சிறப்படையும்.

★ கிழக்கு பக்கம் அதிக காலியிடம் இருந்தால் ஆண்குழந்தைகள் தான் பிறக்கும்.

மேற்கு பக்கம் அதிக காலியிடம் இருந்து கிழக்கு பக்கம் ஜன்னல்கூட இல்லையென்றால் பெண்குழந்தைகள் மட்டும் இருக்கும். ஆண் வாரிசு இல்லாமல் இருக்கும். மேலும் பொருளாதாரம் ஏற்றத்தாழ்வு கொண்டதாக இருக்கும்.

★ அக்னி மூலையில் சந்து அல்லது நீண்டு இருந்தால் (வழி இருந்தால்) தெற்கு பார்த்த வீடாக இருந்தால், அந்த வீட்டிற்கு சொந்தக்காரர் ரெடிமேட் சாப்பாடு மற்றும் இட்லி மாவு போன்ற உணவு சம்பந்தப்பொருட்களை விற்பனை செய்யலாம். அது அவர்களுக்கு வளர்ச்சியையும் கொடுக்கும். மேலும் சுவையும் நன்றாக இருக்கும். (காரணம் அக்னி மூலைக்கு உரியவர் சுக்கிரன். ஆகையால் சமையல் சம்பந்தப்பட்ட தொழில் அபிவிருத்தி அடையும்). அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர் ஜாதகத்தில் சுக்கிரன் ஆட்சியாகவோ, உச்சமாகவோ இருந்தால் குறுகிய காலத்திற்குள் அவர் கோடீஸ்வரராக ஆவார்.

★ தென்மேற்கு மூலையில் கட்டிடம் அமைந்து, அதில் டீக்கடை, வடைக்கடை, ஸ்வீட் ஸ்டால் போன்றவற்றைத் துவக்கினால், அந்தக் கடையின் அதிபர் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைவார். தென்மேற்கு கன்னி மூலை – இராகு – அகால போஜனம். தொழிலாளர்களுக்கு உடையவன். (பெரிய ஹோட்டல், ரெஸ்டாரெண்ட் போன்றவை இருக்கக்கூடாது.)

★ ***வீட்டில் ஈசானம் மற்றும் அனைத்து மூலைகளும் சரியாக அமைத்து இரண்டு வருடகாலம் ஆகி, மிக நல்ல நிலையில் முன்னேறி வந்தோம். திடீர் என்று மிகப்பெரிய சரிவு ஏற்பட்டு உள்ளது. என்ன காரணம்?***

வீட்டில் உள்ள பெண்கள் காலில் தங்கத்தாலான கொலுசு மற்றும் மெட்டியை அணிந்திருத்தல் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தும். தங்கத்திற்கு உரிய கிரகம் குரு. மேலும் குருவுக்கு உரிய உடல் உறுப்புகள் கழுத்து, கை, விரல், இடுப்பு. இதனால் தங்கத்தை இடுப்புக்குக்கீழ் மெட்டியாகவோ, கொலுசாகவோ போடக்கூடாது. இடுப்புக்கீழ் உள்ள உறுப்புகள் சுக்கிரனைக்குறிக்கும். அதாவது

வெள்ளியைக் குறிக்கும். ஆதலால் வெள்ளியில் மட்டும் மெட்டி மற்றும் கொலுசு அணிதல் நலம் பயக்கும். மாற்றி அமைத்தால் விபரீத விளைவுகளை உண்டு பண்ணும்.

★ பொதுவாக வீட்டின் தென்மேற்கு மூலையில் தண்ணீர் போர் போட்டிருந்தால், வாஸ்துப்படி அவ்வீட்டில் திடீர் மரணம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அப்படி நினைக்கவேண்டாம். வீட்டில் உள்ளவர்களுக்கு ஜாதகப்படி லக்கினத்திற்கு எட்டாம் இடம் வலுப்பெற்றிருந்தால் ஒன்றும் ஆகாது. ஆனால் பெரும்பாலும் ஒரு ஆண், ஒரு பெண்ணிற்கு மேல் அதிகமான நபர்கள் இருந்தால் மிகப்பெரிய அளவில் சண்டைச் சச்சரவுகள் இருக்கும்.

★ வீட்டில் ஈசானம் அல்லது கன்னி பாகத்தில் பிரமீடு போல் கட்டடம் அமைத்து, அதில் உறங்கினால் நல்ல தூக்கம் வரும். தியானம் செய்தால் உடலும், மனமும் நன்றாக இருக்கும். கண்டிப்பாக அதிக வயது வரை வாழலாம்.

★ பொதுவாக சூரியன் அஸ்தமனம் ஆன பிறகு (மாலை 6–00 மணிக்கு மேல்) வீட்டை சுத்தம் செய்யக்கூடாது. கூட்டிப் பெருக்கக்கூடாது. லக்ஷ்மிவாசம் போய் விடும்.

★ தங்கம் மற்றும் வெள்ளிக்கடை வைத்திருப்பவர்கள் கண்டிப்பாக ஈசானம் மற்றும் அக்னி மூலைகளை மிக மிக சுத்தமாக வைத்திருக்கவேண்டும். ஏனெனில் ஈசானம் – குரு – தங்கத்திற்கு உரியவர். அக்னி – சுக்கிரன் – வெள்ளிக்கு உரியவர்.

★ வடக்கு, கிழக்கு பார்த்த வீட்டிற்கு ஈசான மூலை முன்புறம் வரும். வீட்டில் வயதானவர்கள் நடக்க சிரமப்பட்டு ஈசான மூலையில் கழிப்பிடம் அமைத்தால் விபரீதமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

★ பூஜை அறைக்கு மட்டும் கடப்பா கற்களை (சிலாப்) தவிர்க்கவும். அப்படி அமைத்திருந்தால் அதற்குமேல் பேப்பர், பலகை, அட்டை வைத்துக் கொள்ளவும்.

★ லக்கினத்திற்கு 4–ம் இடத்தில் இராகு இருந்தால் வீடு கட்டும் யோகம் சற்று தாமதப்படும். மேலும் 4–க்கு 4–ஆம் வீடான 7ஆம் வீட்டையும் பார்க்கவேண்டும். நவாம்சத்தில் 4–க்குடையவர் இருக்கும் வீட்டைப் பொறுத்து விரைவில் நமக்கு வீடு கட்டும் யோகமும் அமையும். சுபகிரகங்கள் பார்ப்பது சிறப்பு.

★ ***புது வீடு கட்டி அதற்கு தெய்வங்களின் பெயரை வைக்கலாமா?***

தாராளமாக வைக்கலாம். வீட்டு எஜமானருக்கு லக்கினத்திற்கு ஒன்பதாம் வீட்டிற்குரிய கிரகத்தின் திசை அல்லது புத்தி நடக்கும் தருவாயில் நல்ல திருப்புமுனையைச் சந்திப்பார். வீட்டில் திடீரென்று அகால மரணம் அடைந்தவர்கள் பெயர்களை வீட்டிற்கு வைப்பதைத் தவிர்க்கவும்.

★ வீட்டின் அக்னிமூலையில் பெட்ரூம் அமைத்து, அதில் குழந்தைக்கு தொட்டில் போட்டு இருந்தால் குழந்தைகள் திடீரென்று அழும். பயந்த கோளாறு ஏற்படவும் வாய்ப்புக்கள் உண்டு.

★ வருடத்திற்கு ஒருமுறை வீட்டில் கணபதி ஹோமம், அக்னி ஹோத்ரா போன்ற யாகங்கள் செய்தல் நலம். தலைவாசல் நிலை வைத்த நாளன்றோ அல்லது விசேஷ நாளன்றோ தலைவாசல் பூஜை செய்தால் வீட்டிற்குள் எந்தத் தீயசக்தியும் வராது. வருடத்திற்கு ஒருமுறை பூஜை அல்லது ஹோமம் செய்வது சிறப்பானது.

★ புது வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்பவர்கள், வீட்டின் ஈசான மூலையில் செம்மண் உருண்டைகள் மூன்றை வைத்து, அவைகளுக்கு சந்தனம், குங்குமம் இட்டு, தூப – தீபம் காட்டி பூஜை செய்து, பிறகு ஹோமங்கள் செய்தல் நலம் பயக்கும். எந்த வித தீயசக்திகளையும் விரட்டி விடும். (கன்னி இராசிக்காரர்கள் அவசியம் செய்யவும். வீடு கட்டி முடித்தவர்களும் இதைச் செய்யலாம்.)

★ வீட்டில் பெரிய அளவில் சுப விசேஷ வைபவங்களை செய்பவர்கள், அன்று இரவு விசேஷம் முடிந்த பின், கொஞ்சம் சூடம் எடுத்து, தண்ணீரில் கரைத்து வாசலில் தெளித்தால் விசேஷத்தில் ஏற்பட்ட திருஷ்டி கண்ணேறுகள் நீங்கும். பொறாமை எண்ணத்துடன் விழாவிற்கு வந்தவர்களின் துர்பார்வை ஒன்றும் செய்யாது.

★ திருத்தம் செய்ய முடியாத வாஸ்து தோஷம் உள்ள வீட்டில் வசிப்பவர்கள் மற்றும் வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள் :

ஓம் அநுக்ரகரூபாய வித்மஹே
பூமிபுத்ராய தீமஹி
தந்நோ வாஸ்துபுருஷ: ப்ரசோதயாத்

தினமும் இந்த மந்திரத்தை 17 முறை ஜபித்து வந்தால் அன்றைய தின வாஸ்து தோஷம் அகலும். மேலும் வாஸ்து காயத்ரீ, அபிராமி

அந்தாதி, சௌந்தர்ய லஹரி, தேவாரம், திருவாசகம், விநாயகர் மூலமந்திரம், ஸ்கந்த சஷ்டி கவசம், நவகிரக ஸ்லோகம் அல்லது காயத்ரீ, அக்னி ஹோத்ரா இவைகளில் ஏதாவது ஒன்றை பின்பற்றலாம்.

அக்னிஹோத்ராவை சந்தியாகாலமான காலை 5.45 மணிக்கும், மாலை 5.45 மணிக்கும் செய்யவேண்டும். அக்னிஹோத்ரா பூஜை முறை அடுத்து வெளிவரும் புத்தகத்தில் விரிவாக தரப்படும்.

★ தெற்கு பார்த்த வீடு கட்டுவதால், வீட்டில் உள்ள பெண்களின் குழந்தைப்பேறு காலத்தில் சுகப்பிரசவம் ஆவது சற்று கடினமே. காரணம் தெற்கு செவ்வாய்க்கு உரிய திசை. ஆனால் தென்மேற்கு மூலையான கன்னி மூலையில் பெட்ரூம் வாஸ்து முறையில் அமைத்திருந்தால் இப்பிரச்சனை ஏற்படாது.

★ கடந்த சில மாதங்களுக்கு முன் கிட்டதட்ட அனைவருமே மழைநீர் சேகரிப்பு தொட்டியை அமைத்திருப்பீர்கள். கிழக்கு, வடக்கு பார்த்த வீட்டிற்கு பெரும்பாலும் முன்புறம்தான் போட்டிருப்பீர்கள். அவ்வீடுகள் அமைத்த தொட்டி ஈசானமூலை, கிழக்கு, வடக்குத்திசை என்ற அமைப்பைப் பெற்றிருக்கும். அவ்வாறு அமைத்தவர்கள் மிகப்பெரிய அளவில் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

★ ***வீட்டின் பூஜை அறையில் விக்கிரங்களை வைத்து வழிபடலாமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் :***

தாராளமாக வழிபடலாம். ஆனால் வழிபடும் விக்கிரகம் கட்டைவிரலை விட உயரமாக இருக்கக்கூடாது. அவ்வாறு உயரமாக இருக்கும் விக்கிரகங்களை வைத்து வழிபடுவோர் தினமும் ஆச்சார அனுஷ்டானங்களுடன் அந்த தெய்வ விக்கிரகங்களுக்கு அபிஷேக ஆராதனைகளுடன் நைவேத்தியம் படைத்து பூஜை செய்யவேண்டும்.

★ ***எனது வீட்டின் ஈசான மூலையில் அடுப்படியை வைத்திருக்கிறேன். இதனால் எனக்கு ஏதேனும் பாதிப்புகள் வருமா? என்று நண்பர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதில் :***

குழந்தைகள் சரியாக படிக்கமாட்டார்கள். மேலும் தலை சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் அடிக்கடி வரும். பிடிவாத குணம், சேஷ்டை இருக்கும். தீயவழியில் நடக்கவும், திக்கித்திக்கிப் பேசவும் வாய்ப்பு உண்டு.

★ வீட்டின் தலைவாசல் வெட்டுப்பட்டோ அல்லது கீறல் விழுந்தோ இருந்தால் வீட்டின் சொந்தக்காரரின் ஜாதகத்தில் சூரியன் சரியில்லை என்று அர்த்தம்.

★ சிலர் அடிக்கடி வெளியூர் அல்லது வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்து கொண்டிருப்பார்கள். பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதிக்க விரும்புகிறார்கள். இவர்கள் கீழ்க்கண்டவாறு வீட்டை அமைத்துக்கொள்ளலாம்.

வடமேற்கு மூலை வீடு அல்லது நிலை இருந்தால் கடல் கடந்து பிரயாணம் செய்ய வாய்ப்புகள் கூடும். மேலும் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திங்களூருக்குச் சென்று சந்திரனை தரிசனம் செய்தல் நலம். ஏனெனில் வாயு மூலை சந்திரனைக் குறிக்கிறது. இவர் ஜலகாரகன்.

★ *கட்டடப் பொறியாளரின் அறிவுரைப்படி வாஸ்து சாஸ்திரத்துடன் புதிதாக வீடு ஒன்று கட்டியுள்ளேன். வடகிழக்கு மூலையில் கார் போர்டிகோ அமைத்துள்ளேன். ஆனால் காரை வாங்கி நிறுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளேன். நான் காரை வாங்க, வீட்டைத் திருத்தி மாற்றியமைக்கலாமா?* என்று ஒரு அன்பர் கேள்வி கேட்டுள்ளார்.

அவரின் ஜாதகத்தில் குருவானவர் 6–8–12 ஆகிய இடங்களில் மறைந்திருக்கலாம் அல்லது அவர் நீசம் பெற்றிருக்கலாம். அவ்வாறு அவருடைய ஜாதகத்தில் குருவானவர் பலமிழந்திருந்தால் ஈசான மூலையில் வேம்பு, அரசு, பாலை அல்லது வில்வம் போன்ற சமித்துக்களை வாங்கி நட்டு வைக்கலாம். அக்குச்சிகளில் குருவின் ஆதிக்கம் நிரம்ப உள்ளது. கண்டிப்பாக நான்கு சக்கர வாகனம் உங்கள் போர்டிகோவில் நிற்கும். சுக்கிரனை வழிபடல் நலம்.

★ *எனது வீட்டிற்கு எதிரில் கோயில் உள்ளது. இது வீட்டிற்கு குத்து என்றும், வீட்டிற்கு ஆகாது என்றும் பெரியவர்கள் சொல்கிறார்கள். நான் என்ன செய்வது?*

கவலைப்படவேண்டாம். உங்கள் ஜாதகப்படி, உங்கள் வீட்டிற்கு எதிரில் கோயில் இருக்கவேண்டும் என்பது விதி. தெய்வங்கள் நமக்கு நன்மைகள் மட்டுமே செய்யும். தினமும் அக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபாடு செய்யுங்கள். தெய்வம் நன்மைகளை வாரி வழங்கும்.

★ ஜாதகத்தில் 10–ஆம் இடத்தில் சுக்கிரன் அமையப் பெற்றவர்கள், கட்டடப்பொறியாளர்கள், கட்டட காண்ட்ராக்டர்கள், சுக்கிரனைச் சார்ந்த தொழில்களை செய்து வருபவர்கள் கண்டிப்பாக வருடந்தோறும் திருச்சி, ஸ்ரீரங்கம், அரங்கநாதப்பெருமாளை அர்ச்சித்து தரிசனம் செய்தல் நலம். ஸ்ரீரங்கம் சுக்கிரனுடைய திருத்தலம்.

மேலும் பெருமாள் அலங்காரப்பிரியர். கலைநயமும் கொண்டவர். ஆதலால் அரங்கநாதனின் தரிசனம் அல்லல் இல்லாத பேரின்ப வாழ்வை அளிக்கும்.

அதே போல் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சூரியனார் கோயிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ள கஞ்சனூர், அக்னீஸ்வரரை வழிபட்டு வர ஈசனின் பேரருளும், சுக்கிரனின் அனுக்கிரகமும் கிடைக்கும்.

★ சிவன் கோயிலுக்கு பின்புறமும், விஷ்ணு கோயிலுக்கு முன்புறமும் உள்ள வீடுகளில் குடியிருப்பது மிகவும் நல்லது. லக்ஷ்மி கடாட்சம் இருக்கும்.

★ காலையில் எழுந்தவுடன் கெட்ட சேதியைக் கேட்டால், பூஜை அறையில் உள்ள விளக்கில் ஊற்றியுள்ள எண்ணையைப் பார்த்தால் அது சம்பந்தப்பட்ட பயம் விலகும்.

★ ***வீட்டில் ஆர்ச் டோர், ஆர்ச் விண்டோ (வளைவாக உள்ள நிலைக்கதவு - ஜன்னல்) வைக்கலாமா?***

பழங்கால கலாச்சாரங்கள் இப்போது நாகரிகமாகி வருகிறது. நன்றாக அமைக்கலாம். ஆனால் கதவிற்கோ, ஜன்னலுக்கு எதிர்குத்து விழாமல் பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

★ ***வீட்டின் பூஜை அறையின் முகப்பை கோயில் போல் வடிவமைக்கலாமா?***

குறைவொன்றுமில்லை. தாராளமாக அமைக்கலாம். ஜாதகப்படி லக்னாதிபதியும், குருவும் வலுத்திருந்தால் இயற்கையாகவே அவ்வாறு அமையும்.

★ கட்டட வேலை நடைபெறும்போது, கட்டட சாமான்களை காலால் எத்துவது, தூக்கி எறிவது, கட்டடத்தில் எச்சில் துப்புவது (பீடா போட்டு துப்புவது), மூக்கு சிந்துவது – இவை வீட்டு எஜமானனை பாதிக்கும். இச்செயல்களைத் தவிர்க்கவும். (வீட்டு எஜமானன் உள்பட)

★ வீடு கட்ட ஆரம்பிக்கும்போது வாஸ்து பூஜை செய்வது வழக்கம். அப்போது அப்பூஜையில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் வாஸ்துபுருஷ காயத்ரீ மந்திரத்தை 17 முறை வாய்விட்டு ஜபிப்பது நலம். இவ்வாறு செய்தால் தோஷமில்லாமல் வீட்டைக் கட்டி முடிக்க வாஸ்துபகவான் அருள் செய்வார்.

★ கட்டடம் கட்டிக்கொண்டிருக்கும்போது வேலையாள் தவறி விழுந்தால் அடுத்த நாள் எலுமிச்சம்பழத்தை நான்காக நறுக்கி குங்குமம் தோய்த்து நான்கு மூலைகளில் பிழிந்து விடவும். வாஸ்து புருஷ காயத்ரீ மந்திரத்தை 17 முறை ஜபித்து விடவும். தோஷம் விலகி விடும்.

★ கிரகப்பிரவேசத்திற்கு முதல் நாள் தச்சு கழித்தல் என்று சொல்லப்படும் சேவலை பலி கொடுக்கும் சடங்கு மிகப்பெரிய குற்றம்.

ஆதலால் வீட்டைக் கட்டி முடித்து, நடு இரவில், நடு ஹாலில் சேவல் பலி இடுவதற்கு நாமே உடந்தையாக இருப்பதால் பிரம்மஹத்தி தோஷத்திற்கு ஆளாக நேரிடும்.

கிரகப்பிரவேசத்தன்று வேத விற்பன்னர்கள் யாகம் வளர்த்து, மந்திரம் ஓதி, வீட்டிலுள்ள வாஸ்து தோஷத்தை நீக்கி விடுவார்கள். அப்படி ஏதேனும் தோஷமிருந்தால் உங்களால் வீட்டைக் கட்ட முடியாது. வீட்டின் உள்ளே பசுமாடு வராது.

★ பசுமாடு புது வீட்டிற்குள் வந்து சாணமிடுதல் நலம். லக்ஷ்மிகடாக்ஷம் ஏற்படும். இன்றைய காலப்போக்கில் மார்பிள் மற்றும் டைல்ஸ் பதித்து வீட்டைக் கட்டுகிறார்கள். அம்மாதிரியான வீட்டிற்குள் பசுமாடு வருவதில்லை. தரை வழுக்கும் என்பதால் பயப்படும். அந்தச் சூழ்நிலையில் பசுமாட்டின் சாணத்தை எடுத்து நீரில் கரைத்து வீடு முழுவதும் தெளித்து விட்டாலும் போதுமானதே.

★ வளர்பிறை திதிகளில் கிரகப்பிரவேசம் வைத்தல் நலம். அடுத்தடுத்து வீட்டை கட்டலாம்.

★ பஞ்சு மில் தொழிலாளர்கள் வீட்டை மேற்கு பார்த்து கட்டுவது நல்லது. அக்னி மூலையில் தலைவாசல் இருப்பது சிறப்பு.

★ மருத்துவமனைகள் தெற்குத்திசையைப் பார்த்து அமைத்தால், நோயாளிகள் உடனே குணமாகி வீட்டிற்குச் சென்று விடுவார்கள்.

★ ஒருவர் சொந்த வீட்டில் வசித்து வருகிறார். அவருடைய வீட்டிற்கு எதிர்வீடு கிரயத்திற்கு வருகிறது என்றால் இவர் தாராளமாக அவ்வீட்டை வாங்கி குடிபோகலாம். தோஷம் இல்லை.

★ அலுவலகம், வங்கி போன்ற நிறுவனங்களில் கணணியில் பணி புரிபவர்கள் கிழக்குப் பார்த்து அமர்ந்து வேலை செய்தால் இரண்டு மணிநேரம் அதிகமாக வேலை பார்க்கலாம்.

★ நமது அண்டை வீட்டார் இந்துவா, முஸ்லீமா, கிறிஸ்துவரா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? ஜாதகத்தில் மூன்றாம் இடத்தைப் பார்க்கவேண்டும்.

மேலும் அண்டை வீட்டாரால் சுமூகமான நட்பு கிடைக்குமா? அல்லது நமக்கு பிரச்சனை வருமா? என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

★ வீட்டின் தென்மேற்கு மூலையில் தென்னை, வேம்பு போன்ற மரங்களை வளர்க்கலாம். நல்ல பலன்களைக் கொடுக்கும். நச்சுத் தன்மையுள்ள மரங்களைத் தவிர்க்கவும்.

★ வீட்டின் நடு ஹாலில் போர்வாள், கத்தி, சிங்கத்தின் தலை, எருமையின் தலை, அகோரமாக தலைவிரி கோலத்துடன் நிற்கும் பெண்ணின் உருவமோ படமோ வைக்க வேண்டாம்.

★ கிழக்குப் பார்த்து சாப்பிடுவது நலம். வடக்குத் தவிர மற்ற திசைகளில் தலைவைத்து தூங்கலாம்.

★ ஜாகத்தில் நான்காம் இடத்தில் சூரியனும் சுக்கிரனும் இருந்தால் சொந்த வீடும், வாகனமும் அந்த ஜாதகருக்கு அமையும். குருவும் கேதுவும் அமர்ந்திருந்தால் வீடு ஒரு சிறிய சந்தில் இருக்கும். பக்கத்தில் ஒரு பெண் தெய்வத்தினுடைய கோயில் இருக்கும். மருத்துவமனையும் இருக்க வாய்ப்புண்டு.

★ மேஷம் இராசி நேயர்கள் மலை, சிறு காட்டுப்பகுதி, போர்க்களம், நெருப்பு – வெப்பம் அதிகமுள்ள பகுதி, சிறு கிராமங்களில் வசிக்க வாய்ப்புண்டு.

★ ரிஷப இராசி நேயர்கள் கால்நடைகள் மேயும் புல்வெளிப்பகுதி, வயல் பகுதி, தொழுவம், தச்சுப்பட்டறை உள்ள பகுதிகளில் வசிக்க வாய்ப்புண்டு.

★ மிதுன இராசிக்காரர்கள் நூல் நிலையம், கல்வி நிறுவனம் உள்ள பகுதி, வியாபார வீதி, கடலுக்கு அருகிலுள்ள இடங்களில் வசிக்க வாய்ப்புண்டு.

★ கடக இராசி அன்பர்கள் கடற்கரை, நதிக்கரை, புண்ணிய ஸ்தலங்கள், பள்ளமான பகுதிகளில் வசிக்க வாய்ப்புண்டு.

★ சிம்ம இராசியினர் அரண்மனை, அலுவலகங்கள், குகைகள், பாலைவனம், உயரமான பகுதிகள், விலங்குகள் வசிக்கும் இடங்களில் வாழ வாய்ப்புண்டு.

★ கன்னி இராசிக்குரியவர்கள் கல்விக்கூடங்கள், வியாபாரத் தலங்கள், இயற்கைக் காட்சி நிறைந்த இடங்கள், விவசாய நிலம், தோட்டங்கள் நிறைந்த பகுதிகளில் இருக்கலாம்.

★ துலாம் இனத்தவர் வியாபார வீதி, கல்வி நிறுவனம் சார்ந்த இடங்களில் வாழ சந்தர்ப்பம் உண்டு.

★ விருச்சிகம் சார்ந்தவர்கள் முட்களும் கற்களும் நிறைந்த பகுதி, விஷ ஜந்துக்கள் வாழும் பகுதி, குறுகிய பகுதி, தொழிற்சாலைப் பகுதி, குளிக்கும் தொட்டி, சலவை செய்யும் படித்துறை, குப்பை கொட்டும் பகுதி, கிணறு உள்ள பகுதிகளில் வாழ வாய்ப்புண்டு.

★ தனுசு இராசிக்காரர்கள் காட்டுப்பகுதி, மரங்கள் அடர்ந்த பகுதி, வளமான பகுதி, ஆயுதங்களை பதுக்கி வைக்கும் இடம், இராணுவ தளம் உள்ள பகுதி, பூஜை செய்யும் பகுதிகளில் வாழலாம்.

★ மகரம் இராசிநேயர்கள் அணைக்கட்டுப்பகுதி, கடற்கரை, சேறு நிரம்பிய பகுதி, சேற்று நீர் தங்கிய பகுதி, காவலர் குடியிருப்பு, காட்டுப்பகுதி, தொழிற்சாலை உள்ள பகுதிகளில் வாழ வாய்ப்புண்டு.

★ கும்பம் இராசி அன்பர்கள் நீர்நிலைகள், இருட்டுப்பகுதி, கள்ளுக்கடை, சூதாடும் இடம், மாமிசம் விற்கும் பகுதி, தொழிற்சாலை பகுதி, தானியம் விளையும் பகுதிகளில் வாழ நேரிடும்.

★ மீனம் அன்பர்கள் கிணறு, நீர் நிறைந்த தொட்டி பகுதி, குளம், புண்ணிய நதிக்கரைகள், தலங்கள், கடற்கரை, நதிக்கரைகளில் குடியேறும் வாய்ப்புண்டு.

★ கன்னி மூலையில் போர், ஆழ்குழாய், கிணறு அமைத்திருந்தால் மரண தேவதை நம்மை அழைக்கும் என்பது பரவலாக பேசப்படும் செய்தி.

கன்னியில் போர் போட்டால் திடீர் மரணம் சம்பவிக்காது. கன்னி மூலைக்குரிய கிரகம் இராகு (துர்கை). ஆயுளுக்கும் இராகுவுக்கும் சம்பந்தம் இல்லை. ஆயுள்காரகன் சனிபகவான். மேற்கு திசைக்குரியவர். மேலும் வீட்டு எஜமானுக்கு 8ஆம் இடம் வலுத்திருந்தால் துர்மரணம் ஏற்படாது. கும்ப லக்னம் உள்ள ஜாதகருக்கு 4–ஆம் வீட்டில் சந்திரன் + இராகு இருவரும் உச்சம் பெறுகின்றனர். அந்த ஜாதகருக்கு நீர்நிலை நன்றாக இருக்கும். கடற்கரையைச் சார்ந்த பகுதியில் வசிக்க நேரிடலாம். மேலும் கன்னி மூலைக்குரிய ராகுவுக்கு ஜலகாரகனான சந்திரன் பகையல்ல. சிற்சில பிரச்சனைகள் நேரிடலாம். கண்டிப்பாக திடீர் மரணம் சம்பவிக்காது. மேலும் கிழக்கு, வடக்கு பார்த்த வீட்டிற்கு பெரும்பாலும் மேற்கிலும், தெற்கிலும் போர் அமைக்க நேரும். ஆதலால் மரண பயம் வேண்டாம்.

பொருளாதாரச்சிரமம் ஏற்படும். சந்திரன் எந்த கிரகத்துடனும் பகை இல்லை.

★ கன்னி மூலையில் உள்ள போர்–ல் இருந்து தண்ணீர் எடுத்து தாராளமாக உபயோகப்படுத்தலாம். கன்னியில் போர் அமைத்திருந்தால் ஈசான மூலையில் 3 அடி நீள, அகல உயரம் கொண்ட கீழ்நிலைத் தொட்டி ஒன்றை அமைத்து, அதில் நீரைத் தேக்கி, அங்கிருந்து கட்டிடத்தின் கன்னிமூலையான தென்மேற்கில் மேல்நிலைத் தொட்டி அமைத்து அதில் நிரப்பவும். இவ்வாறு செய்தால் தோஷ நிவர்த்தியாகி விடும். பயம் வேண்டாம்.

★ ஈசானம் – குரு. சந்திரன் – ஜலகாரகன். ஈசானத்தில் போர் அமைத்து நீரைத் தேக்கி வைத்தால் வீட்டு எஜமானருக்கு குரு சந்திர யோகத்தை உண்டு பண்ணும். அவர் பெரிய செல்வந்தர் ஆகி விடுவார். இதில் துளியும் ஐயம் வேண்டாம்.

★ ஈசான மூலையை அடைத்தும், வடகிழக்கில் ஜன்னல், நிலை இல்லையென்றால் அந்த வீட்டிற்குச் சொந்தக்காரருக்கு குழந்தை பிறப்பது அரிது. மேலும் அப்படியே பிறந்தாலும் பெண் குழந்தை பிறக்கும். அல்லது குறை பிரசவக் குழந்தையாக இருக்கும்.

★ ஈசான மூலையில் செப்டிக் டேங்க், கக்கூஸ், வாட்டர் டேங்க், உயரமான ஆலமரங்கள் இவைகள் இருந்தால் அந்த வீட்டு எஜமானனுக்கு ஆகாது. குருவை நாம் நிந்தனை செய்தால் அவர் மூன்று அல்லது நான்கு முறை நம்மை எச்சரித்து அறிவுறுத்துவார். அப்போதும் நாம் மாற்றியமைக்கவில்லையென்றால் எஜமானரை தன்னுடன் சேர்த்துக்கொள்வார்.

★ லக்னம் மேஷமாகி, நான்காம் வீடாகிய கடகத்தில் சந்திரன் ஆட்சியாகவோ, குரு உச்சமாகவோ அமர்ந்திருந்தால் மேற்சொன்ன பலன்கள் பெரிய அளவில் எஜமானனை பாதிக்காது. இருந்தாலும் முழு அளவில் குருபகவானுக்கு அவருக்கு உதவி செய்யமாட்டார். ஆதலால் ஈசானத்துக்குறைகளை மாற்றியமைத்தல் நலம்.

★ லக்னம் மேஷமாகி, கடகத்தில் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகருக்கு குரு சந்திர யோகமுண்டு. மிகப் பெரிய பங்களா வாங்கவும் அந்த ஜாதகருக்கு யோகமுண்டு.

★ வீட்டிலிருந்து வெளியே கிளம்பும்போது யானை அல்லது பசுமாடு போன்றவை எதிர்பட்டால் செல்லும் காரியம் கைகூடும்.

★ செவ்வாய் ஆதிக்கம் உள்ள ஜாதகர்கள் காவல்துறை மற்றும் தீயணைப்புப்படையில் வேலை பார்த்துக்கொண்டிருப்பார்கள். இராணுவத்திலும் பணிபுரிந்து கொண்டிருப்பார்கள். இவர்கள்

தெற்குத்திசை பார்த்து வாசல்நிலையை அமைப்பது நல்லது. மேலும் இவர்கள் செவ்வாய் கிரகத்திற்கு அதிபதி முருகப்பெருமானை வழிபடல் வாழ்வில் மேலான நிலைக்கு அழைத்துச்செல்லும்.

★ புதிதாக இடம் மற்றும் பிளாட் வாங்குபவர்கள் அந்த இடத்தின் ஈசான மூலையில் வாஸ்து பகவானுக்குப் பூஜை செய்து வேம்பு, பாலை, வில்வம், அரச சமித்துக்கள் போன்றவற்றை எரித்தால் அந்த இடத்தில் எந்தவொரு துஷ்டம் இருந்தாலும் அவ்விடத்தை விட்டு அகன்று விடும்.

★ துர்மரணம் ஏற்பட்ட வீட்டை வாங்க நேரிட்டால் ஞாயிற்றுக்கிழமை மாலை 4–30 மணி முதல் 6–00 மணிக்குள் கழுதை ஒன்றை அவ்வீட்டிற்குள்ளே கட்டிப்போட்டு, மறுநாள் திங்கட்கிழமை காலை 9–00 மணிக்கு அக்கழுதையை அவிழ்த்துவிட்டால் அவ்வீட்டில் எந்தவொரு துஷ்டம் அல்லது பெரிய அளவில் செய்வினை, ஏவல், பில்லி, சூனியம் ஏதாவது செய்திருப்பின் பரிகாரமாகி தோஷநிவர்த்தியாகி விடும்.

★ வடக்குப் பார்த்து கடையை வைத்திருப்பவர்கள் ஈசான மூலையில் கல்லாபெட்டி வைக்காமல், வாயு மூலையில் கிழக்கு நோக்கி அமரும் வண்ணம் கல்லாப்பெட்டியை அமைப்பது நலம். ஈசானத்தின் வழியாக வாடிக்கையாளர்கள் நமது கடைக்குள் நுழையும்வண்ணம் கடையை அமைக்கவும். தெய்வ சக்திகள் ஈசானத்தின் வழியாக கடைக்குள் வந்து தங்கும். கடையில் லக்ஷ்மிகடாக்ஷம் நிரம்பி இருக்கும். கடைக்குள் வரும் வாடிக்கையாளர்கள் பொருட்களை வாங்காமல் திரும்பி போகமாட்டார்கள்.

★ ***என்னுடைய நண்பனும் நானும் சேர்ந்து வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில் ஒரே மாதிரியான கட்டடத்தைக் கட்டினோம். என்னுடைய நண்பனின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டு மேலும் இன்னொரு பிளாட்டையும் வாங்கி விட்டான். நான் மிகவும் சிரமப்படுகிறேன். வாழ்வில் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறேன். என்ன காரணம்?***

பூர்வ ஜென்மக் கர்மாவும், ஜாதக ரீதியாக 5–ஆம் இடத்தின் பலவீனமும் காரணம். இதற்கு பரிகாரமாக, உங்களுடைய பெற்றோருக்கு புது வஸ்திரங்கள் வாங்கி கொடுத்து சாஷ்டாங்கமாக அவர்களை வணங்கி, பூரணமான ஆசீர்வாதத்தைப் பெறவும். மேலும் சைவம் அல்லது வைணவ முறைப்படி குருவைத் தேடிச்சென்று அவர்களிடம் தீட்சைப் பெறவும். குரு வழியில் ஆச்சார

அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்து வரவும். 45 நாட்களில் நல்ல மாற்றம் ஏற்படும். நீங்களும் உங்கள் நண்பரைப் போல முன்னேறுவீர்கள்.

★ வீட்டிற்குள் நுழையும்போது நமது முகம் நிலைக்கண்ணாடியில் தெரியும்படி வைத்தல் மிகவும் நல்லது.

★ அப்பார்ட்மெண்டில் வீடு வாங்குபவர்களுக்கு செவ்வாய் நீசமடைந்தோ, 6–8–12 ல் மறைந்தோ இருக்கும்.

★ அபார்ட்மெண்டில் 3–வது, 4–வது, 5–வது மாடியில் பிளாட் வாங்கினால் வாஸ்து பார்க்கத் தேவையில்லை என்று நிறைய பேர் நினைக்கிறார்கள். இது மிகவும் தவறானது. அப்பேற்பட்ட பிளாட்டுகளுக்குத்தான் முறைப்படி வாஸ்து சாஸ்திரம் பார்க்கவேண்டும். ஏனெனில் அங்குதான் பூரணமாக வேலை செய்யும். சாஸ்திரப்படி வீடு அமைந்திருந்தால் கூடுதலான நன்மைகளையும், தோஷப்படி வீடு அமைந்திருந்தால் கூடுதலான தீமைகளும் ஏற்படும்.

★ *நான் ஒரு பிளாட் புரோமோட்டார். அனைத்து பிளாட்டுகளையும் வாஸ்துபடி கட்ட முடியவில்லை. ஏனெனில் இடத்தின் பயன்பாடு குறைந்து விடுகிறது. சிறிய அளவில் குறை இருந்தாலும், வாஸ்து பார்க்க வருகிறவர்கள் பெரியதாக குறை கூறி தவிர்த்து விடுகிறார்கள். இதனால் என்னுடைய பிளாட்டுகளை விற்க முடியவில்லை. என்ன செய்யலாம்...?*

கவலைப்படவேண்டாம். ஒருவருடைய ஜாதகப்படி நான்காம் இடத்தில் ஏதேனும் தோஷம் இருக்கும். அந்த ஜாதகரின் அமைப்பும், வீட்டின் அமைப்பும் ஒரே மாதிரியாக இருக்கும். அவர் உங்கள் பிளாட்டை வாங்கி விடுவார்.

★ வீட்டின் நடுவில் முற்றம் வைத்துக் கட்டலாமா? என்று கேட்கிறார்கள். தாராளமாகக் கட்டலாம். ஏனெனில் பிராணன் (வாயு பகவான்) வீட்டின் முற்றத்தின் வழியாகத்தான் வீட்டிற்குள் வருகிறார்.

★ வீட்டின் தலைவாசலுக்கு மேல் கக்கூஸ், பாத்ரூம் இருக்கக்கூடாது.

★ கல்யாண மண்டபம் கட்டுபவர்கள் முறையான வாஸ்து சாஸ்திரத்தின் அடிப்படையில் கட்டுவது சாலச்சிறந்தது. வாஸ்து தோஷமுடன் கட்டியிருந்தால் அந்த தோஷம் கண்டிப்பாக அவரின் மகன், பேரன்களையும் பாதிக்கும்.

★ கட்டடப்பொறியாளர்கள், காண்ட்ராக்டர்கள், ஆலோசனை வழங்குபவர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்.

கன்னி மூலையில் போர் போடுமாறு யாரையும் அறிவுறுத்த வேண்டாம். ஏனெனில் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கும், பிரச்சனை களுக்கும் நாம்தான் முழு பொறுப்பாகிறோம். கன்னி மூலை இராகுவைக் குறிப்பதால் பிதுர் தோஷத்தையும் நாம் சம்பாதிக்க நேரும். நமது சந்ததிகளும் பாதிப்புக்கு ஆளாவர்கள்.

★ எஜமானன் வீட்டைக் கட்டி முடித்தவுடன், வீட்டைக் கட்டிக் கொடுத்த இன்ஜினியர், கொத்தனாருக்கு கொடுக்க வேண்டிய பாக்கித்தொகையுடன் சந்தனம், குங்குமம், விபூதி, பழங்கள், வெற்றிலை பாக்கு போன்ற பூஜைப் பொருட்களை தாம்பூலத்தில் வைத்து கொடுத்தால் விஸ்வகர்மாவுக்கு பிரீதி செய்த பலன் கிடைக்கும். விஸ்வகர்மாவால் ஏற்பட இருக்கும் தோஷமும் நிவர்த்தியாகும்.

★ தீபாவளியன்று நாதஸ்வரம், கெட்டிமேளம் போன்ற இசைக்கருவிகளை ஒலிக்கச்செய்தால் வீட்டில் லக்ஷ்மி குடிகொள்வாள்.

★ எஜமானன் வீட்டைக் கட்டி முடித்தபிறகு கிரகப்பிரவேசத்தன்று கொத்தனார், சித்தாளுக்கு புது வஸ்திரங்களை தானமாகக் கொடுப்பது வழக்கம். அதேபோல் அன்றைய தினம் வீட்டுக்கு அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று அம்பாள், சுவாமிக்கு புது வஸ்திரங்களை உடுக்கச்செய்து தன்னுடைய பெயருக்கும், குடும்பத்தினர் பெயருக்கும் அர்ச்சனை செய்தால் ஆண்டவன் நமக்கு என்றென்றும் துணையாக இருப்பான். கிரகப்பிரவேசம் செய்து ஒரு வருடம் ஆகியுள்ளவர்களும் இந்த புனித கைங்கர்யத்தை மேற்கொள்ளலாம்.

★ ரூப் கான்கிரீட் போடும் அன்று கட்டடத்தொழிலாளர்களுக்கு அன்னதானம் செய்வது மிகவும் சிறப்பானதாகும். சகல தோஷங்களையும் நிவர்த்தி செய்வது அன்னதானம்.

★ வீடு கட்டுபவர்கள் நல்ல நீரில் வீடு கட்டவும். பக்கத்தில் தேங்கி இருக்கும் நீர், கழிவு நீர், குட்டை போன்றவற்றிலிருந்து நீரை எடுத்து வீடு கட்டினால் தோஷம் உண்டாகும்.

★ மழைநீரைக்கொண்டு வீடு கட்டினால் சந்திரனால் ஏற்படுகின்ற தோஷம் போகும். மேலும் அவ்வீட்டில் இருப்பவர்களுக்கு கற்பனை சக்தி அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பும் ஏற்படும்.

★ வாஸ்து முறைப்படி செய்ய வேண்டியவை : கிழக்கு முகமாக நின்று சமையல் செய்வது, வடக்கு – தெற்காக கழிவு கோப்பையை அமைப்பது, கிழக்கு நோக்கி அமர்ந்து சாப்பிடுவது, அதே திசையில் அமர்ந்து தியானம் செய்வது, கிழக்கு நோக்கி பூஜை அறையின் நிலையை அமைப்பது, வடக்கு – கிழக்காகவும், தென்மேற்கு மூலையிலும் பீரோக்கள் வைப்பது, சமையலறையில் தென்மேற்கு மூலையில் கிரைண்டர் வைப்பது, வடக்குத்திசையைத் தவிர மற்ற திசைகளில் தலை வைத்து உறங்குவது, கிழக்கு நோக்கி அமர்ந்து படிப்பது, கிழக்கு நோக்கி – முடியாதபட்சத்தில் வடக்குப் பார்த்து தெய்வப் படங்களை வைப்பது, தெற்குப் பார்த்து மறைந்த நம் முன்னோர்களின் படங்களை வைப்பதும் சாலச்சிறந்தது.

★ வெள்ளிக்கிழமை மாலை வீட்டின் தலைவாசலைக் கூட்டிப்பெருக்கி, தண்ணீர் தெளித்து கோலம் போட்டு பெரிய எலுமிச்சம்பழத்தை இரண்டாக அறுத்து, அவற்றை குங்குமத்தில் தோய்த்து, தலைவாசலின் இரண்டு பக்கங்களிலும் அவற்றை வைத்து விட்டு, தீபமேற்றி, சாம்பிராணி போட்டு பூஜை செய்து வரவேண்டும். இவ்வாறாக ஐந்து வாரங்கள் செய்து வந்தால் மஹாலக்ஷ்மி வீட்டில் வாசம் செய்வாள். கேட்ட வரங்களை வாரி வழங்குவாள்.

★ ஓட்டு வீடு, ஏ.சி. ஷீட் போட்ட வீடுகளில் மேற்கு, தெற்கு பக்கம் மட்டும் தாழ்வாரம் போடக்கூடாது. தற்போது கரவு தாழ்வாரம் (ஸ்லோப் ரூப்) போட்டு கட்டப்பட்டு வரும் புது வீடுகளுக்கும் அவ்வாறு போடக்கூடாது. இது பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தும்.

★ கிழக்குத்திசை சூரியனுக்கு உகந்த திசை. கிழக்கில் ஜன்னலோ, நிலைக்கதவோ இல்லாதவர்கள் – வியாபாரியாக இருந்தால் அரசாங்கத்தால் தண்டனைக்குள்ளாவார்கள். அரசாங்கத்தில் பணிபுரிபவர்களுக்கு ப்ரமோஷன் கிடைக்காது. மேலதிகாரியின் தொந்தரவு இருக்கும்.

★ சுக்கிரனும் ராகுவும் சேர்ந்திருந்தால் வீட்டுக்காரர் பிறந்த வீட்டில் புதையல் இருக்கும். அதை ஒரு நாகப்பாம்பு பாதுகாத்து வரும். மிகப்பெரிய செல்வந்தராக இருப்பார். சந்திரன் + கேது சேர்ந்திருப்பின், வீட்டுக்காரர் பிறந்த வீட்டிற்கு அருகில் பெண்தெய்வத்தின் கோயில் இருக்கும்.

★ வீட்டிலிருந்து பெண் பார்க்கச் செல்பவர்கள் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதுவும் மாலை 4–30 மணி முதல் 6–00 மணி வரை ராகு காலம் என்பதால்

மாலை 3–00 மணி முதல் 4–30 மணி நேரத்தை தேர்ந்தெடுத்து பெண் பார்க்கச் செல்கிறார்கள். அந்த நேரம் குளிகனின் நேரம். குளிகன் நேரத்தில் எந்த ஒரு காரியத்தைச் செய்தாலும் அதை திருப்பித்திருப்பி நடக்கும்படி செய்யாக்கிவிடுவார். உதாரணமாக நாம் அந்த நேரத்தில் நகைகள் வாங்கினால் தொடர்ந்து நகைகளை வாங்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். ஆதலால் பெண் பார்க்கும் படலத்தை மாலை 6–00 மணிக்குமேல் வைத்துக்கொண்டால் சீக்கிரமாக பெண் அமையும்.

★ தலைமாட்டுக்கு மேல் செல்போனை சார்ஜ் செய்வதைத் தவிர்க்கவும். கதிர்வீச்சுக்களால் தலைவலி, தலை சம்பந்தப்பட்ட நோய் வரக்கூடும்.

★ அக்னிமூலையில் அறை இருப்பின், அந்த அறையில் வெள்ளிப் பொருட்களை வைக்கவும். அவை மென்மேலும் பெருகும். சுக்கிரன் அக்னி மூலைக்குரிய கிரகம்.

★ வக்கீல் தொழில் புரிபவர்கள் மேற்குப் பார்த்து தலைவாசல் வைப்பது நலம். பணிக்குக் கிளம்பும்போது மேற்கு திசையை நோக்கி கிளம்புவது ஜெயத்தைக் கொடுக்கும்.

★ பூப்பல்லாக்கு, சுவாமி நகர்வலம் வரும்போது நமது இடத்திலோ அல்லது வீட்டிலோ அவை சிறிது நேரம் இருக்கும் அமைப்பு உள்ளவர்கள் வடகிழக்கு மூலை அல்லது தென்மேற்கு மூலை அல்லது நமது இடத்தின் நடுவில் அவை இருக்குமாறு செய்வது நலம். இதனால் பல நன்மைகள் கிடைக்கும்.

★ வீடு கட்டி கிரகப்பிரவேசம் செய்பவர்கள் அன்று இரவு புதுவீட்டில் தங்குவது நல்லது.

★ வீட்டில் எலக்ட்ரிக் பைப் செல்லும் வழியில் (கன்சீல்டு) எலக்ட்ரானிக் கடிகாரம் போன்றவைகளை மாட்டுவதைத் தவிர்க்கவும்.

★ ஈசான மூலையில் ஏணி, செருப்பு, அழுக்குத்துணி, உடைந்தப் பொருட்கள், கற்குவியல், உயரமான படி போன்றவை இருந்தால் அகற்றவும்.

★ ***எங்கள் வீட்டில் மொத்தம் ஆறு பேர். தாய் - தந்தை - நான்கு குழந்தைகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ராசி. எந்தத்திசையில் நிலையை வைப்பது?***

யாருடைய பெயரில் நிலம், வீடு உள்ளதோ அவரின் ஜாதக அமைப்புப்படி தலைவாசல் வைப்பது சிறப்பு.

★ புதிதாக வீடு கட்டும்போது வீட்டிற்கு முன்புறம் பத்து அடி காலியிடமும், பின்புறம் பதினைந்து அடி காலியிடமும், வலது அல்லது இடதுபக்கம் ஐந்து அடி காலியிடமும் விடவேண்டும் என்பது மாநகராட்சியின் ஆணை.

ஆனால் வாஸ்துபடி, மேற்குப்பக்கம் அதிக இடம் காலியாக இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் பொருளாதாரச் சிரமத்தை அது உண்டுபண்ணும். அரசாங்கத்தினால் பிரச்சனைகள் வர வாய்ப்பு உண்டு.

★ தினமும் காலையில் சூரிய நமஸ்காரம் செய்வது நல்லது.

★ தெற்குப் பார்த்த வீட்டிற்கு அக்னி மூலையில் தலைவாசல் இருப்பது தவறில்லை.

★ ஒரே நேர்க்கோட்டில் மூன்று நிலைகள் இருக்கக்கூடாது.

★ அடிக்கடி வாஸ்துபடி வீட்டை பலமுறை மாற்றம் செய்வது வாஸ்து தோஷத்தை ஏற்படுத்தும். சிறந்த வாஸ்து நிபுணரை அணுகி, ஜாதக ரீதியாக மாற்றம் செய்யவும்.

★ கன்னிமூலையில் நின்று தலை வாரக்கூடாது. கட்டிலுக்குக்கீழ் பழைய துணிமணிகள், சாமான்களை வைக்கக்கூடாது. வாகனங்களை கிழக்கு அல்லது வடக்கு முகமாக நிறுத்தவும். வருடத்திற்கு ஒருமுறை வீட்டை சுத்தம் செய்து வெள்ளையடிப்பது நல்லது. (சீன வாஸ்து)

★ அடிக்கடி ஜாகதம் பார்த்து வீடு கட்டும் பலனைப் பற்றி ஆராய வேண்டாம். அதற்குப் பதிலாக குடியிருக்கும் வீட்டின் ஈசான மூலையை சுத்தமாக வைத்துக்கொண்டாலே போதும். (குரு)

★ வங்கி, பெட்ரோல் பங்க், வணிக நிறுவனங்களுக்கு கன்னி மூலையில் டாய்லட், பாத்ரூம் இருந்தால் அங்கு பணிபுரிபவர்களுக்கு பணி உயர்வு மற்றும் வரவேண்டிய தொகைகள் வராமல் தடைப்படும். பணமும் களவு போகக்கூடும்.

★ ஹோட்டல் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு தலைவாசல் நடுவில் இருக்க வேண்டும்.

★ அரசியல், சினிமாத்துறையில் உள்ளவர்கள் கிழக்குப் பார்த்து தலைவாசலை அமைத்துக்கொள்வது நலம். அவர்கள் அக்னிமூலையை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

★ வடகிழக்கு மூலையில் துளசிமாடம் இருக்கக்கூடாது. துளசி – உஷ்ணம். ஈசானம் – குரு. இது உஷ்ணத்தைக் கிளப்பும்.

★ வீட்டில் வில்வ சமித்துக்களை வைத்து ஹோமம் செய்தால் மகாலட்சுமியின் பூரண அருள் கிடைக்கும்.

★ வீட்டில் நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளை வளர்ப்பவர்கள் வடமேற்கு மற்றும் தென்கிழக்கு மூலைகளை அப்பிராணிகளின் இருப்பிடமாக அமைக்கவும்.

★ வீட்டின் எதிரில் கரும்பாறை இருக்கக்கூடாது.

★ வீடு முக்கோணம் மற்றும் வட்டமாக இருந்தால் அவ்வீட்டில் இருப்பவர்கள் அநாதையாகி விடுவார்கள்.

★ பாலத்திற்குக்கீழ் வீடு மற்றும் கடைகள் இருப்பதை தவிர்க்கவும்.

★ ரோட்டில் கடைகள் போட்டு வியாபாரம் செய்பவர்கள் கிழக்கு அல்லது வடக்கு பார்த்து நின்று வியாபாரம் செய்யவும்.

★ கட்டடம் கட்டிக்கொண்டிருக்கும்போது வீட்டு எஜமானரின் மகளோ, பேத்தியோ அல்லது வேலை பார்க்கும் சித்தாளோ யாராவது புஷ்பவதியானால் அந்த வீட்டில் அடிக்கடி சுபச்செய்திகளைக் கேட்கலாம். நல்லதே அதிகமாக நடக்கும்.

★ தலைவாசலில் காவல் தெய்வம், நமது குலதெய்வம் நம் இல்லத்தைக் காத்துக் கொண்டிருக்கும். லட்சுமியும் தலைவாசலில் குடியிருப்பதாக ஐதீகம். ஆகையால் வீட்டில் அடிக்கடி அல்லது தினமும் அசைவ உணவு சாப்பிடுவதைத் தவிர்க்கவும். இதனால் ஞாபகமறதி, முரட்டுத்தன்மை, உடல் உபாதைகள், இல்லறத்தில் பல்வேறு பிரச்சனைகள் போன்றவை அடிக்கடி நிகழும். உயிர் வதை நம் வாழ்க்கைக்கு உலை.

★ வாஸ்துவுக்கு ஜாதி, மதம் இல்லை.

★ வீட்டின் முன்புறம் ஒரு தூண் மட்டும் வைத்து வீடு கட்டக்கூடாது. குறைந்தபட்சம் இரண்டு தூண்கள் இருக்கவேண்டும்.

★ ஊருக்கு நடுவில் ஒத்த மெச்சு வீடு அமைக்கக்கூடாது.

★ நம் வீட்டிற்கு அருகில் 10 அடி தூரத்துக்குள் 33 கிலோ வாட்ஸ், 66 கிலோ வாட்ஸ் மின்சாரக் கம்பிகள் செல்லக்கூடாது. அப்படி சென்றால் மூளைப்பகுதியில் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன.

★ வீட்டின் தலைவாசலில் கோடாலி மற்றும் அறிவாள் போன்றவற்றால் வெட்டிய வெட்டு இருக்கக்கூடாது.

★ தலைவாசல் கதவுகளில் தெய்வங்களின் சிற்ப வடிவிலான உருவங்களைப் பொறிக்கக்கூடாது. கதவுகளிலும் படங்கள் இருக்கக்கூடாது. தலை வாசலுக்கு மேல் ஸ்திரமாக (நிலையாக) இருக்கும்படி படங்களை வைக்கலாம்.

★ தலைவாசலுக்கு இருபுறமும் இடம் இருந்தால் மாடக்குழிகள் அமைக்கவும். தலைவாசலுக்கு இருபுறமும் தீபம் எரிவது லக்ஷ்மிகடாக்ஷத்தை ஏற்படுத்தும். கார்த்திகையில் தீபம் ஏற்றுவது மிகவும் விசேஷமாகும்.

★ வீட்டின் முன்புறம் கோயில் போன்ற அமைப்பை உருவாக்கலாம். தப்பில்லை. சுதை வேலைப்பாடுகள்கூட இருக்கலாம். அகோர தெய்வங்கள் இருப்பதைத் தவிர்க்கவும்.

★ வீட்டின் மேற்புறத்தில் ஏ.சி. ஷீட் வைப்பதை தவிர்க்கவும். வெயில் காலங்களில் அதிகமான உஷ்ணத்தை ஏற்படுத்தும். இதனால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

★ ***வீடு கட்ட ஆரம்பித்தவுடன் ஏகப்பட்ட இன்னல்கள் வந்து வீடு கட்ட முடியாமல் பல ஆண்டுகளாக சிரமப்படுகிறேன். இதற்கு ஏதேனும் தீர்வு இருக்கிறதா என்று கூறவேண்டும்.***

தேய்பிறை அஷ்டமி திதியில் வரும் இராகு காலத்தில் கோயிலுக்குச் சென்று துர்க்கையம்மனின் பாதங்களில் இரண்டு எலுமிச்சம்பழங்களை வைத்து அர்ச்சனை செய்து வழிபட்டு, அந்த இரண்டு பழங்களையும் கொண்டு வந்து ஈசான மூலையில் ஒரு அடி நீளம், ஒரு அடி அகலம், ஒரு அடி பள்ளம் தோண்டி மண்ணை அப்புறப்படுத்தி, புதுமண்ணைப் போட்டு, அந்த எலுமிச்சம்பழங்களை குங்குமம் தோய்த்து பிழிந்து விடவும். பிறகு தூப, தீபம் காட்டி பூஜை செய்தால் பிரச்சனைகள் தீர்ந்து வீடு விரைவில் கட்டி முடிக்கலாம்.

★ வீட்டிற்கோ கடைக்கோ கருப்பு சம்பந்தப்பட்ட வர்ணங்களை தீட்டியவர்கள், கருப்பு சம்பந்தப்பட்ட வியாபாரம் செய்பவர்கள் சனிபகவானை வாரம் ஒருமுறை தரிசித்து வரவும்.

வீட்டு எஜமானரின் ஜாதகத்தில் சனி நீசமடைந்தோ, 6–8–12 ல் மறைந்தோ இருந்தால் கருப்பு வர்ணத்தைத் தவிர்க்கவும்.

★ பூஜை அறையில் இரும்புப்பலகையை ஆசனமாக அமைத்து பூஜை, தியானம் போன்றவைகளை செய்யக்கூடாது. கல்லாப்பெட்டி அருகில் அமர்ந்து வியாபாரம் செய்பவர்களும் இதை தவிர்க்கவும்.

★ தலைவாசலுக்கும் சற்று தாழ்ந்து பெயர்ப்பலகைகள் இருக்கக்கூடாது.

அப்படி இருந்தால் உடனடியாக சீர் செய்யவும். நிலைப்பாய்ச்சல் ஆகிவிடும்.

★ வீட்டின் மையப்பகுதி மட்டும் மிக உயரமாக இருக்கக்கூடாது.

★ லக்னத்திற்கு நான்காம் இடத்தில் சுக்கிரன் இருப்பாரானால் அந்த ஜாதகருக்கு ஒன்று மேற்பட்ட வீடுகள் அமையும். அவர் வசிக்கும் வீடு கலையம்சத்தோடு அமையும். (Doc, Mazzanine floor வைத்துக் கட்டுவார்கள்.)

★ கல்லூரி பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு பெரும்பாலும் வாஸ்து சாஸ்திரப்படி வீடு அமையும். ஏனெனில் புதனும், சுக்கிரனும் நல்ல நிலையில் இருப்பார்கள்.

★ லக்னத்திற்கு நான்காம் வீட்டை சுக்கிரன் ஏழாம் பார்வையாகப் பார்த்தால் பெரிய வீடாக அமையும்.

★ மதுரை, தெப்பக்குளம் மாரியம்மன் கோயில் அமைப்புப் பற்றி சிறு விளக்கம்.

வடகிழக்கு மூலையில் அடுப்பு, தென்மேற்கு மூலையில் கிணறு மற்றும் மடப்பள்ளி, கிழக்குத் திசையை அடைத்து கல்யாண மண்டபம், தெற்குத்திசையில் தெப்பக்குளம், அதன் நடுவில் மைய மண்டபம் உயர்ந்து காணப்படல், தென்கிழக்கு மூலையில் நுழைவு வாசல், முன்புறம் அகன்றும், பின்புறம் சிறுத்தும் காணப்படுகிறது. இவை அனைத்தும் வாஸ்து தோஷங்கள்.

இவ்வளவு தோஷங்கள் இருந்தும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கூட்டம் அலைமோதுகிறது. நினைத்த காரியங்கள் ஈடேறுகின்றன. நல்ல பலன்கள் கிடைக்கின்றன. இதற்குக் காரணம் கோயில் கட்ட ஆரம்பித்தபோது அடிக்கல் நாட்டிய நேரமும், விக்ரகத்தின் அமைப்பும் பூரண அம்சத்துடன் இருப்பதே.

தென்மேற்கு மூலை ராகுவைக் குறிக்கிறது. ராகுவுக்கு அதிபதி துர்க்கையம்மன். கன்னி மூலையில் போர் போட்டு பொருளாதாரச் சிக்கலில் உழல்பவர்கள் இக்கோயிலுக்குச் சென்று அம்மனை வழிபட நல்ல மாற்றங்களை காணலாம்.

கோயிலின் இந்த தோஷங்களை நிவர்த்தி செய்யும் விதத்தில் திருத்தி அமைத்தால் இன்னும் கூட்டம் அதிகமாக வர ஆரம்பித்து விடும்.

★ ***வீடு கட்ட ஆரம்பிக்கும்முன் என்ன செய்யவேண்டும்?***

1. நல்ல நேரம் – சகுனம் பார்த்து இன்ஜினியரையோ கொத்தனாரையோ அழைத்துச் சென்று நிலத்தை பார்ப்பது.
2. நிலத்தை சமதளமாக்குவது மேலும் ஈசான மூலை சற்று பள்ளமாக இருக்கும்படி அமைப்பது.
3. நிலத்தின் ஈசான மூலையில் அரசு, வேம்பு, வில்வம் போன்ற சமித்துக்களை வைத்து எரித்து தீயசக்திகளை அகற்றுவது.
4. இன்ஜினியரிடம் வாங்கிய வரைப்படத்தை வாஸ்து நிபுணரிடம் காண்பித்து வாஸ்து சாஸ்திரப்படி வரைப்படம் உள்ளதா என்று ஆலோசனை கேட்டு சரி செய்து கொள்வது.
5. நல்ல வாஸ்து நாள் அன்று வாஸ்து பூஜை செய்வது, வாஸ்து காயத்ரீ 17 முறை சொல்வது.
6. ஈசான மூலையில் கட்டட வேலையை ஆரம்பித்து, கன்னி மூலையில் செட் போட்டு மின்சார இணைப்பை வாங்குவதும், ஈசான மூலையில் போர் போடுவதும், பிறகு வானம் வெட்டி கட்டடம் எழுப்புவது.
7. நல்ல நாளன்று நிலை வைத்து பூஜை செய்து, பிறகு கிரகப்பிரவேசம் செய்வது.

★ ***என் கணவர் மற்றும் மாமனார் இருவரும் சேர்ந்து மது அருந்துகிறார்கள். குடிப்பழக்கத்தை நிறுத்த ஏதாவது வழி உண்டா?***

வடமேற்கு மூலையான வாயு மூலை கெட்டுப் போய் இருக்கும் அல்லது போர் போடப்பட்டிருக்கும். வாயு மூலைக்குரியவர் சந்திரன். இவர் மனோகாரகன். மன சஞ்சலத்தை ஏற்படுத்துவார். ஒரு வேளை வாயு மூலையில் மாஸ்டர் பெட்ரூம் இருந்தால் அதை உடனடியாக கன்னி மூலைக்கு மாற்றவும். இவ்வாறு செய்தால் அவர்கள் குடிப்பழக்கத்தை விட்டு விடுவார்கள். சந்திர தலமான திங்களூர் அல்லது திருப்பதி சென்று வரவும்.

★ ***மதுரை, பேலஸ் ரோட்டில் உள்ள ரிஜிஸ்டிரார் ஆபீஸின் வடகிழக்கு மூலையில் ரெஸ்ட் ஹவுஸும், பாத்ரூமும் உள்ளது. இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா?***

குருபகவானுக்குரிய ஈசான மூலை கெட்டு போய்விட்டது. இதனால் அந்த அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்ய வருபவர்களில் யாருக்காவது பணம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வரும். மேலும் கலப்புத்திருமணம் அதிகமாக பதிவு செய்யக்கூடிய சூழ்நிலையையும் அங்கு பார்க்கலாம்.

★ *ஒரு பெண், இரண்டு - மூன்று ஆண் குழந்தைகள் உள்ள குடும்பத்தில் ஏதாவது ஒரு பையனுக்கு தொழில் மந்தமாகவோ, சுறுசுறுப்பு இல்லாமல் சோம்பேறியாகவோ இருக்கிறான். இதற்கு என்ன காரணம்?*

குலதெய்வ வழிபாடு இல்லாமல் இருப்பதுதான் இதற்குக் காரணம். அன்றாட வாழ்வில் நாம் மூன்று தெய்வங்களை அவசியம் வழிபடவேண்டும்.

1. இஷ்ட தெய்வம் – எந்த வேலையை ஆரம்பித்தாலும் நமது இஷ்ட தெய்வத்தை வழிபட்டு காரியங்களை செய்தால் ஜெயம் நிச்சயம். உதாரணம், விநாயகர், முருகன், மீனாட்சி போன்றவை.

2. வழிபடு தெய்வம் – காலை, மதியம், மாலை, இரவு என நான்கு காலப்பூஜை வழிபாடு செய்யப்படும் தெய்வத்தை வழிபடல். உதாரணமாக, சிவபெருமான், பெருமாள்.

3. குல தெய்வம் – வருடத்திற்கு ஒருமுறை வீட்டில் பெட்டி வைத்து கன்னி தெய்வத்தை வழிபடுதல், சொந்த ஊரிலுள்ள கோயிலுக்கு சென்று குலதெய்வத்தை வழிபடல்.

இவைகளைத் தொடர்ந்து செய்து வந்தால் நம்முடைய வாழ்க்கை நன்றாக இருக்கும். பொருளாதார ஏற்றம் ஏற்படும்.

★ *நிரந்தரமாக உள்ள பொருளாதாரச் சிக்கல், உடல் உபாதைகளுக்கு தீர்வு உண்டா?*

1. குல தெய்வ வழிபாடு, 2. இருக்கும் இடத்தின் வாஸ்துவை சரி செய்தல், 3. நம் முன்னோருக்கு திதி, திவசம் கொடுப்பது, 4. பில்லி – சூனியம் போன்றவற்றை அகற்றுவது, 5. நம் உடலில் நமக்குத் தெரியாமல் நம்முடைய சக்தி வெளியேறி விடாமல் பார்த்துக்கொள்வது இவைகள் மூலம் தீர்வு காணலாம்.

★ வீட்டில் உள்ளவர்கள் கோபம் வந்தால் தலைவாசல் மற்றும் பீரோவை எத்துவது கூடாது. சூரியனால் பாதிப்புக்கள் ஏற்படும். பிற்காலத்தில் பொருளாதாரச்சிக்கல்கள் ஏற்படும்.

★ வீட்டில் விஷ ஜந்துக்கள் அடிக்கடி வந்தால் என்ன செய்வது?

இராகு பகவானையும், துர்க்கை – ப்ரத்யங்கிரா தேவியையும், சிவன் ஆலயத்தில் உள்ள நஞ்சுண்டேஸ்வரரையும், நஞ்சுண்டேஸ்வரியையும் வழிபடவும்.

★ வாஸ்து பார்க்க வருகிறவர்கள் ஒரு டம்ளரில் தண்ணீர் ஊற்றி எலுமிச்சம்பழத்தைப் போட்டு வைத்து வாஸ்து பார்த்தால் தடங்கல் இல்லாமல் வாஸ்து ஆலோசனைகளைக் கூறலாம்.

★ வீடு கட்டுவதற்கு முன் திசைமானியை வைத்து சரியான திசையில் பிளாட் உள்ளதா என்று சரி பார்க்கவும். வடக்குப் பார்த்த மனை பத்து அல்லது இருபது டிகிரிக்கு கிழக்கு நோக்கி திரும்பி உள்ளது என்று கொள்வோம். கட்டடமும் அவ்வாறே மனைக்கு ஏற்ப கட்டப்பட வேண்டும்.

வீடு கட்டும்போது சாலையின் தோதுக்காக கட்டி வாஸ்துவைக் குறை கூறக்கூடாது. பெரும்பாலானோர் இவ்வாறு செய்கிறார்கள். பக்கத்து வீடு, அடுத்த வீடு, எதிர் வீடும் இப்படித்தானே உள்ளது. அவர்களுக்கும் வாஸ்து தோஷம் இருக்குமே என்று மனநிறைவு கொள்கிறார்கள்.

★ பிளாட்டின் மையப்பகுதி பிந்து எனப்படுகிறது. பெண்ணின் தொப்புள் கொடி வழியாகத்தான் வயிற்றில் உள்ள குழந்தைக்கு உணவு, மூச்சுக்காற்று செல்கின்றன. அதுபோலத்தான் பிளாட்டின் மையப்பகுதியும்.

★ திசைமானியை வைத்து ஒரு பிளாட்டை பார்க்கும்போது அந்த பிளாட் சரியாக 90 டிகிரி வடக்குத்திசையை பார்க்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால் அந்த பிளாட்டில் 45 டிகிரிக்கு கட்டடத்தை கிராஸாகக் கட்டினால் விபத்து, கருச்சிதைவு, பெண்களின் கருப்பையில் பிரச்சனை, மூச்சுத்திணறல், ஆஸ்த்துமா போன்றவை ஏற்படும். இவ்வாறு கட்டடம் எழுப்பிய இன்ஜினியருக்கோ கொத்தனாருக்கோ இருபது சதவிகித துர்பலன் போய்ச்சேரும். குறுக்கு நெடுக்காக கட்டடத்தை எழுப்பவேண்டாம்.

★ வீட்டின் கிரிலில் சாமிபடம் வைப்பதைத் தவிர்க்கவும். மேலும் தலைவாசலில் சங்கு பதிக்கும்போது சில நியமங்கள் இருக்கின்றன. அதை கடைப்பிடிக்கவும்.

★ வடக்கு, கிழக்குப் பார்த்த கடைகளுக்கு பணப்பெட்டி வாயு அல்லது அக்னி மூலையில் இருக்குமாறு அமைக்கவும். வெள்ளிக்கடை வைத்திருப்பவர்களுக்கு சுக்கிரன் உச்சம் பெற்றிருப்பார். அவர்கள் ஈசானத்தில் வாசலை வைத்து, அக்னி மூலையில் பணப்பெட்டியை வைத்து வடக்கு நோக்கி அமர்ந்து வியாபாரம் செய்தால் வியாபாரம் நன்றாக இருக்கும்.

★ கிழக்கு மண்டலம் – வடகிழக்கு மூலையில் உயரமான கட்டடம், முக்கோண அமைப்புடன் ஈசான குறை, கன்னி மூலையில் வழி, பாத்ரூம்.

இங்கு வேலை பார்ப்பவர்களுக்கு (வ.கி. மூலை – குரு – பணம், புகழ், அந்தஸ்து, மேலதிகாரி, பொன்) மேலதிகாரிகள் தொந்தரவு, பணம் சம்பந்தப்பட்ட பிரச்சனை இருந்து கொண்டே இருக்கும். முக்கோண வடிவ மனையாதலால் முன் சொன்ன தீய பலன் உண்டு.

★ தெற்கு மண்டலம், வடகிழக்கு மூலையில் டாய்லெட் மிக உயரமாக உள்ளது. கட் ஆகி உள்ளது. கிழக்குப் பார்த்த கட்டடம் – அக்னி மூலையில் வாசல். பெரிய அதிகாரிக்கு அக்னி மூலையில் அறை உள்ளது. பில்டிங் இன்ஸ்பெக்டர் அமர ரூம் இல்லை. மேலும் தெற்கு தாழ்வாரத்தில் அமர்வு. வாயு மற்றும் கன்னி மூலையில் நல்ல பள்ளம்.

திடீர் சஸ்பெண்ட், மதுபானப் பழக்கம், வெளியாட்கள் தொந்தரவுகள், பெரிய மனிதர்களால் தொந்தரவுகள் வர வாய்ப்புண்டு.

★ மேற்கு மண்டலம், மிகப்பெரிய வாட்டர் டேங்க். மேலும் வட்டமாக உள்ளது. நீர் நிலை தொட்டி.

ஜலகாரகன் சந்திரன் ஆதிக்கம் உள்ளது. இதற்குக்கீழ் அமரக்கூடாது. ஞாபக சக்தி குறையும்.

★ வீட்டில் ஈசான மூலையை தவிர்த்து, ஸ்பைரல் படி (சுற்று படி) தாராளமாக அமைக்கலாம்.

★ ***கட்டடம் வாஸ்துபடி அமைந்து விட்டது. ஆனால் டாய்லெட் கோப்பையை மட்டும் கிழக்கு - மேற்காக அமைத்து விட்டேன். இதனால் பெரிய பாதிப்புகள் வருமா?***

முன்காலத்தில் வீடுகளில் பாத்ரூம் கிடையாது. வயல்வெளிகளில் காலைக்கடனை முடித்துக்கொண்டிருந்தார்கள். கிழக்கு மேற்காக அமர்ந்தால் சூரியனின் ஒளி பட்டு கண்கூசும். மேலும் சூரியபகவானை நிந்திப்பதாகும் என்று வடக்கு மேற்காக அமர்ந்து காலைக்கடன்களை முடித்தார்கள். இதன் காரணமாகத்தான் வடக்கு தெற்காக கோப்பையை அமைக்கின்றனர். கிழக்கு மேற்காக இருப்பதால் எந்த ஒரு பெரிய பாதிப்பும் இல்லை. புது வீடு கட்டுபவர்கள் வடக்கு தெற்காக கோப்பையை அமைக்கவும்.

★ ***அரசியலில் உள்ளவர்களுக்கு திடீர் ரெய்டு, பதவி பறிப்பு வரக் காரணம் என்ன?***

ஈசான மூலையில் பெரிய கட்டடம், கக்கூஸ், தலைவர்களின் சிலை, இரும்பாலான பொம்மை போன்றவை இருந்தால் தொந்தரவுகள் வரும்.

நேரம் சரியாக இருந்து கட்டடத்தின் அமைப்பும் நன்றாக இருந்தால் பதவி கிடைக்கிறது. வீடு சரியில்லையென்றால் பதவி பறி போகும். சிரமங்களுக்கு ஆளாக நேரும்.

★ ***ஊரில் உள்ள அனைவருக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால்?***

ஊர் கோயில் சிற்ப சாஸ்திரம், வாஸ்து சாஸ்திரம் சரியில்லாமல் இருக்கும். கிரகம், திசை, புத்தி, ஊர்த்தலைவர், ஊருணி இவைகளில் கோளாறு இருக்கும்.

★ வாஸ்து தோஷமுள்ள வீட்டை சாஸ்த்திரப்படி மாற்றியமைத்துவிட்டு அடுத்த நாளே நல்ல பலன்களை எதிர்பார்க்க வேண்டாம். ஒரு மண்டலமாவது ஆகவேண்டும்.

★ ***வீட்டிற்கு முன் கோலம் போடுவது ஏன்?***

அதிகாலையில் வாசலைத் தெளித்து, கோலம் போடுவது வீடு லக்ஷ்மி கடாட்சத்துடன் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். முன்காலத்தில் அரிசி மாவினால் கோலம் போடுவது வழக்கம். எறும்பு, புழு, பூச்சிகள் வந்து அதைச் சாப்பிட்டுவிட்டுப் போகும். இதுவும் அன்னதானமே. 100 பேருக்கு அன்னதானம் செய்தால் ஜாதக ரீதியாக உள்ள கிரக தோஷம் நீங்கிவிடும் என்று ஜோதிடர் சொன்னால் நாட்டு சர்க்கரையையும் அரிசிமாவையும் கலந்து கோயில்களில் உள்ள அரசமரத்தினடியில் போட்டு வந்தால் நூற்றுக்கணக்கான உயிர்களுக்கு அன்னதானம் செய்த பலன் கிடைக்கும். சாணம் தெளித்து கோலம் போடுவது மிகமிகச் சிறந்தது.

★ ***அமாவாசையன்று கோலம் போடலாமா?***

அன்றைய தினத்தில் நம்முடைய முன்னோர்கள் வீட்டிற்கு வந்து வாசம் செய்வார்கள். மேலும் அவர்களுக்கு திதி, தர்ப்பணம் போன்றவை செய்வது வழக்கம். ஆகையால் அமாவாசையன்று மட்டும் கோலம் போடுவதைத் தவிர்க்கவும்.

★ ***வீட்டில் காகத்திற்கு அன்னம் எங்கு படைக்கவேண்டும்? ஏன் படைக்கவேண்டும்?***

மேற்குத்திசையில் படைக்கவேண்டும். காகங்களுக்கு அன்னம் வைப்பது பித்ருக்களுக்கு வைப்பதாக ஐதீகம்.

★ ***என் வீடு சாஸ்திரப்படி இல்லை. ஆனால் நான் நன்றாக இருக்கிறேன். உதாரணமாக கன்னிமூலையில் போர் போட்டுள்ளேன். ஈசான மூலையில் செப்டிக் டாங்க் உள்ளது.***

ஜாதகத்தில் நான்காம் இடம் நன்றாக இருக்கும். அதனால் பாதிப்பு இருப்பதில்லை. ஆனால் உங்கள் சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள்.

★ பழங்காலத்தில் வீடு கட்டுபவர்கள் முற்றம் வைத்து நல்ல காற்றோட்டத்துடன் வீடு கட்டினார்கள். மேலும் அடுக்குமாடிக் கட்டடங்கள் என்பது பெரும்பாலும் இருந்ததில்லை. காரணம் நகரிலுள்ள பிரசித்தி பெற்ற கோயிலின் கோபுரத்தைவிட உயரமாக இருக்கக்கூடாது என்பதால்தான். ஆனால் இன்று பல நகரங்களில் கோயிலின் கோபுரத்தைவிட அதிஉயரமான கட்டடங்கள் தோன்றி விட்டன. இதற்கு விதி விலக்காக ***மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மீனாட்சியம்மன் கோயிலின்*** கோபுரத்தைவிட உயரமான கட்டடங்கள் கட்டக்கூடாது என்பது மதுரை மாநகராட்சியின் நகரமைப்புப் பிரிவு (Town Planning Section) சட்டமாக இயற்றி இருக்கிறது. இதனால் மதுரைவாழ் மக்கள் தங்கள் வீட்டின் மாடியிலிருந்து கோபுர தரிசனம் செய்து மீனாட்சியம்மன் அருளையும், ஆசியையும் பெறுகின்றனர். (கோபுர தரிசனம் கோடி புண்ணியம்)

★ வீட்டின் குளியலறையில் குளிக்கும்போது நகர்புறங்களில் பெரும்பாலும் துணியே இல்லாமல் குளிப்பது இன்று சகஜமாகி விட்டது. அது தோஷத்தை ஏற்படுத்தும் என்று சான்றோர்கள் கூறியிருக்கிறார்கள்.

★ ஈசன் சொத்து குல நாசம் என்று பேச்சு வழக்கில் சொல்வதுண்டு. இதற்குப் பொருள், வீட்டின் ஈசான மூலை (வடகிழக்கு மூலை) கெட்டுப்போய் (அதாவது கக்கூஸ், செப்டிக் டாங்க், மாஸ்டர் பெட்ரூம்) இருந்தால் அந்த வீட்டில் உள்ளவர்க்கு குலவிருத்தி அடையாமல் போகும் என்பதாகும்.

★ செவ்வக வடிவம், சதுர வடிவமாக இருக்கும் பிளாட் வாங்குவது சிறப்பு. ஏனெனில் அங்கு வீடுகட்டி குடியேறினால் லட்சுமி கடாக்ஷம் ஏற்படும்.

★ ஒரு வீட்டின் ஆயுள் எவ்வளவு காலம் இருக்கும்? சில பேர் கேள்வி எழுப்புகின்றனர். இருநூறு ஆண்டுகள் வரை நன்றாக இருக்கும். இதற்கு கட்டடம் கட்ட ஆரம்பித்த நேரம், வாஸ்து நாள், அன்றைய கோச்சார கிரக அமைப்பு, நட்சத்திரம், இதற்கு மேல் வீட்டு எஜமானரின் ஜாதகத்தில் ஜென்ம லக்கினத்திற்கு நான்காம் இடம் ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் அவர் கட்டியுள்ள வீடு இருநூறு ஆண்டுகள் வரை கண்டிப்பாக உயிர் பெற்றிருக்கும்.

★ ***வெள்ளத்தில் ஆற்றோரத்தில் உள்ள வீடுகள் அடித்துச் செல்வதற்குக் காரணம் என்ன?***

அந்த ஊரில் அல்லது நதியோரத்தில் வசிப்பவர்களுக்கு சந்திரன் நீசம் பெற்றும், மறைந்தும் மற்றும் லக்கினத்திற்கு நான்காம் இடம் சரியில்லையென்றால் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை இவ்வாறு நடக்க வாய்ப்பு உண்டு.

★ ***கட்டடம் திடீரென்று தீப்பற்றி எரிவதற்குக் காரணம்?***

செவ்வாய் நீசம் பெற்றோ, மறைந்தோ இருந்தாலும், மேலும் அவரை எட்டாமிடத்துச் சனி பார்த்தாலும் இதுபோன்ற தீ விபத்து நடக்க வாய்ப்புண்டு. இதற்குப் பரிகாரமாக முருகபெருமானை வழிபடுதலும், திருவண்ணாமலைக்குச் சென்று கிரிவலம் வந்து இறைவனை வழிபட்டால் அக்னி சொரூபமாக உள்ள சிவபெருமான் தீ விபத்து மட்டுமன்று எல்லா ஆபத்துக்களிலிருந்தும் நம்மைக் காப்பார். ஆட்சி, உச்சம் பெற்ற குரு பார்த்தால் இந்த விபத்து நடக்காது.

★ சில வாஸ்து நிபுணர்கள் வாஸ்து பரிகாரமாக பிரிமீடு, மூன்று காலுள்ள தவளை, ஆமை, நாணயம், குவி லென்ஸ், குபேர பொம்மை வீட்டில் வைத்தால் தோஷ நிவர்த்தியாகி செல்வம் பெருகும் என்று கூறுகிறார்கள். இது சரியா?

நமது முன்னோர்கள் கோயிலுக்கு கோபுரங்களை பிரமீடு வடிவில் கட்டினார்கள் என்பதிலிருந்து வாஸ்து சாஸ்திரத்திற்கு பிரமீடு ஏற்புடையது என்பது தெளிவாகத் தெரிகிறது. மற்றவை உபயோகமற்றவை.

★ ***மலைப்பிரதேசங்களில் இருக்கும் சிறு வீடுகளுக்கு வாஸ்து பார்க்க வேண்டுமா?***

கண்டிப்பாக பார்க்கவேண்டும். ஆனால் ஊருக்கு ஊர் வாஸ்து மாறும்.

★ வாஸ்து பகவான் வருடத்திற்கு எட்டு முறை விழித்தெழுவார். அன்று கட்டடம் கட்ட இருப்பவர்கள் வாஸ்து பூஜை செய்தால் அருளாசி வழங்குவார். ஆனால் அன்றைய தினம் அஷ்டமி, நவமி, கரிநாள், தேதி 8, 17, 26 போன்றவை பார்க்கவேண்டியதில்லை.

★ வீட்டில் உறங்கும்போது அடிக்கடி எம பயம் ஏற்பட்டால் அவர்கள் மதுரை, தெற்குமாசி வீதி, தென்திருவாலவாயன் திருக்கோயிலுக்கு வந்து சுவாமியையும், அம்பாளையும் அர்ச்சனை செய்து தரிசனம் செய்தால் அந்த பயம் நீங்கும். யமதர்மராஜா இக்கோயிலுக்கு வந்து இறைவனை வழிபட்டுச் சென்றதாக ஐதீகம். மேலும் பிரதோஷதன்று இக்கோயிலுக்கு வந்து இறைவனை வழிபட்டால் எல்லா வளங்களையும் அடையலாம். சனிப்பிரதோஷம் மிகவும் சிறப்பு.